**அத்தனகல்ல பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 08 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அத்தனகல்ல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் உள்;ராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட போட்டோன் தண்ணீர் தாங்கியொன்றும் ,போட்டோன் பக்கோவின் கொள்வனவு விலை இனங்காணப்படாது அதன் காப்புறுதி செய்த பெறுமதியான ரூபா 20,695,000 மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2 முச்சக்கரவண்டிகளுக்கான செலுத்த வேண்டிய பதிவுக்கட்டணம் ரூபா 11,320 செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவற்றிற்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 மற்றும் 2014 வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு கணக்கெடுப்பில் சபையினால் பாவனைக்குதவாது என ஒதுக்கம் செய்யப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதி முறையே ரூபா 77,050 மற்றும் ரூபா 33,869 கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை..

(ஈ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 18,492 பெறுமதியான ஏக்கர் வரி நிலுவை வருமானக் கணக்குக்கு காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் கூட்டுமொத்தம் ரூபா 771,066 பெறுமதியான தொகை சபையினால் மேற்கொண்ட இரு ஒப்பந்த வேலைகளுக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஒரு கிராமதத்துக்கு ஒரு வேலைத்திட்டம் மூலம் வழங்கப்பட்ட ரூபா 255,600 பெறுமதியான தொகை ஒரு வேலைத்திட்டத்திற்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் சபையினால் 09 வேலைத்திட்டங்களுக்கு ஒப்பந்த பெறுமதியில் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் சென்மதியாளர் கணக்கு மீதி ரூபா 145,004 ஆல் வேறுபாடு காணப்படுகின்றது.

(ஏ) மீளாய்வாண்டில் நிர்மானிக்கப்பட்ட 11 ஒப்பந்த வேலைகளின் ரூபா 6,445,552 பெறுமதியான காணி கட்டடம் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் 23 வேலைகளுக்கான 10 சதவீத பிடிபணம் கணக்குகளில் சென்மதியாக காட்டப்பட்டிருக்காமையினால் சென்மதியாளர் கணக்கு மீதி ரூபா 865,121 பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்த தொகையான ரூபா 29,590,263 பெறுமதியான நடவடிக்கைகளுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 15,448,211 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 30,469,028 விளைந்திருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

(அ) மைதானத்தை பயன்படுத்துவதற்காக சபையினால் மீளளிக்கத்தக்க வைப்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 25,000 பெறுமதியான காசோலை 2015 ஜனவரி 30 ஆந் திகதி வங்கியால் மறுக்கப்பட்டிருந்தபோதிலும் இதனை தீர்ப்பதற்கான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 2,028,520 பெறுமதியான முற்பண கணக்கு மீதியில் இரு வருடத்துக்கு மேலாக உள்ள ரூபா 1,494,058 பெறுமதிக்கு தீர்வு செய்ய எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையின் செயலாளரினால் மீளாய்வாண்டில் அனுப்பிய மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 16,297 | 22,626 | 16,939 |
| வாடகைகள் | 8,289 | 10,920 | 6,696 |
| உரிமங்கள் | 1,921 | 983 | 1,162 |
| ஏனைய வருமானம் | 72,753 | 74,986 | (952) |

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இற்கு ரூபா 25.75 மில்லியன் பெறுமதியான கிடைக்க வேண்டிய வருமானத்தில் 66 சதவீதம் ஆதனவரியாகவும், 26 சதவீதம் கடை வாடகையாகவும் கிடைக்க வேண்டி உள்ளது.

### 2.3.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ஆதனவரி மதிப்பீடு 5 வருடத்துக்கு ஒரு தடவை விலை மதிப்பீட்டு திணைக்களம் மூலமாக மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு ஆதனவரி சேகரிக்கப்பட்டிருந்தது. இதனால் அதிகளவான வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) எகொடபொத மற்றும் மெகொடபொத உப அலுவலகங்களுக்கான ஆதனவரி மதிப்பீடு 2008 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி சேகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பந்தியின் பிரகாரம் உள்;ராட்சி நிறுவனங்களுக்கான ஆகக்கூடிய ஆதனவரி அறவீட்டிற்காக அபிவிருத்தி அடைந்த கிராமங்கள் இனங்கானப்பட்டு வர்த்தகமானியில் அறிவிக்கப்படவேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடை வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பொது மண்டபத்திற்கு முன் உள்ள 48 கடைத்தொகுதியில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,129,515 பெறுமதியான கடைவாடகை அறவிடுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 125 கடைகளுக்கு 10 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்ட மாதாந்த கடை வாடகை தொகையை நடைமுறை விலைக்கு மாற்றம் செய்யப்படாமல் இருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டிய கடை வாடகை ரூபா 2,881,576 அறவிடுவதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1980 திசெம்பர் 31 உள்;ராட்சி ஆணையாளரின் 1980.'.46 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது 5 வருடத்துக்கு ஒரு தடவை கடைவாடகையை மீள்விலைமதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 இலக்க விசேட சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு சபை உப சட்டத்தினை உருவாக்க தீர்மானம் எடுக்கப்பட்டு சபை எல்லைக்குள் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உப அலுவலக எல்லைக்குள் 25 தொலைத்தொடர்பு கோபுரம் இனங்கானப்பட்டிருந்த போதும் வருமானம் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒரு கிராமத்துக்கு ஒரு வேலை, கமனெகும, பாலத்தெகும மற்றும் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களால் சபைக்கு கொடுக்கப்பட்ட திட்டங்கள் செய்வதற்கு விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கு விடுமுறை தினக் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ஆகியவற்றுக்காக ரூபா 520,497 வழங்கப்பட்டிருந்தன. இக்கொடுப்பனவு செய்தமையை உறுதிசெய்வதற்கான வருகை, சென்ற நேரங்களுக்கான கைவிரல் பதிவு இயந்திர தினவரவு

அறிக்கையில் காணப்பட்டிருக்கவில்லை. விடுமுறைதினக் கொடுப்பனவு, மேலதிக நேரக்கொடுப்பனவு ஆகியவற்றுக்கான பதிவேடு மேற்கொள்ளப்படாமையாலும் அந்தந்த நாட்களில் என்ன வேலை செய்தமை என்ற விபரம் இல்லாமை ஆகிய குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**3.2 காணி பிரித்தல்**

மீளாய்வாண்டில் 12 ஏக்கர் 2 றூட் 35.08 பேச்சஸ் அளவுடைய புவக்வத்த பெயருடைய காணியில் 10910 இலக்க காணித் திட்டத்தில் சிறு அலகு காணித்துண்டுகளாக பிரிக்கும் போது ஒரு துண்டில் கட்டாயமாக 12.5 பேச்சஸ் அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் 166 துண்டுகளில் உள்ள 75 சதவீதமானவை 10 பேச்சஸ் அளவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. பொது நோக்கத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட 173 லொட் இலக்கத்தில் உள்ள 5.54 பேச்சஸ் அளவில் வடிகால் உள்ளன. மற்றும் பொது நோக்கத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட மொத்தம் 84.82 பேச்சஸ் காணி உறுதியை சபையினால் பெற்று நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 முறைகேடான கொடுக்கல் வாங்கல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முச்சக்கரவண்டி வாங்கும் போது 2015 மார்ச் 24 ஆந் திகதியில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருக்காது வேறு தனியார் கம்பனி வேண்டுகோளின் படி 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி நடைபெற்றுள்ள நிதிக் குழு வேண்டுகோள் விடுத்த கம்பனியில் ரூபா 1,485,000 பெறுமதியான 3 முச்சக்கரவண்டிகள் கொள்வனவு செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டு வாங்கப்பட்டிருந்தது. 2015 செப்தெம்பர் 20 ஆந் திகதி இவ் முச்சக்கரவண்டியின் இயந்திர குறைபாடுகள், கியர் குறைபாடுகள், மற்றும் அதிக வெப்பமடைதல் ஆகிய குறைபாடுகள் ஏற்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் அக்குறைபாடுகள் மீளவும் உள்ளதாக சாரதியால் அறிவிக்கபட்டிருந்தது. கொள்வனவு விபரணத்தின் படி எரிபொருள் ஒரு லீற்றருக்கு 37 கிலோமீற்றர் வேலை செய்ய வேண்டிய போதும் இவ் முச்சக்கரவண்டியில் 1 லீற்றருக்கு 22 கிலோமீற்றர் மட்டுமே ஓடக் கூடியதாகவுள்ளது.

(ஆ) வாகனம் வாடகை அடிப்படையில் எடுப்பதற்கு மீளாய்வாண்டில் ஜனவரியில் இருந்து ஆகஸ்ட் வரை ரூபா 1,912,125 செலவு செய்திருந்தது. வாடகை அடிப்படையில் எடுத்த வாகனங்கள் கடமைக்கு சென்ற போது தினசரி வாகன ஓட்ட பதிவேடு பராமரிக்கப்படாமலும் மற்றும் வாடகை ஒப்பந்தங்கள் மீளவும் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமாக 10 உழவு இயந்திரங்கள் இருந்த போதிலும் வாடகை அடிப்படையில் உழவு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 ஜனவரி 1 இல் இருந்து 2015 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு ரூபா 659,975 வாடகை செலுத்தப்பட்டமை கணக்காய்வில் சிக்கனமற்றதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2014 நவம்பர் 20 ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தகமானி இலக்கம் 1889.:32 இன் பிரிவு 3(1) சட்டத்திற்கு முரனாக சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திராத சபை உறுப்பினர்களுக்கு ரூபா 185,600 செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

**3.4.1 வியாங்கொடை நகரத்தில் நிர்மானிக்கப்பட்ட கலாச்சார மண்டபம்**

1999 ஆம் வருடத்தில் கம்பஹா மாவட்ட நகர அபிவிருத்தி திட்டத்தில் ரூபா 24,800,000 பெறுமதியான மதிப்பீட்டில் வியாங்கொடை நகர மத்தியில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக கட்டப்பட வேண்டிய பொதுப் பயன்பாட்டு கலாச்சார மண்டப நிர்மாணம் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது பற்றி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 15,000,000 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் கீழ்தளம் கொங்ரீட் இடுதல் மற்றும் சுவர் பூசுதல் ஆகியவற்றுக்கு ரூபா 3,000,000 செலவு செய்யப்பட்டு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலை முடிவடைந்திருந்தது.

(ii) 2016 மே 13 இல் மேற்கொண்ட பௌதீக பரீசீலனையின் போது இந்தக் கட்டடம் கலாச்சார மண்டபம் என இனங்கானப்பட்டு நிர்மணிக்கப்பட்டிருந்தது. பிரதான மண்டபத்திற்கு மேலதிகமாக ஒரு பக்கம் மேல்தள இருக்கை முன்பக்கம் மண்டபமும் இருபக்கமும் மேல்தள இருக்கை மண்டபத்திற்கும் வருகை தருவதற்கான படிகளும் செய்யப்பட்டிருந்தது.

(iii) நிலத்தில் 60 சதவீதம் கொங்ரீட் இடப்பட்டிருந்தது. மண்டபத்திற்கு அருகில் சிறு தினங்களுக்கு முன் தோண்டப்பட்டிருந்தது. மேல்தள இருக்கைக்கு கீழ் தீட்டப்பட்டிருந்த வெள்ளை நிறப்பூச்சு கறுப்பாக மாறியிருந்தது. கட்டட தொகுதியினை பிச்சைக்காரர்கள் பயன்படுத்தியும் கீழ்மாடியில் நாய்கள், மாடுகளும் அவற்றின் கழிவுகளும் காணப்பட்டது.

(iv) நீளம் 155 அடி 3 அங்குலமும், அகலம் 73 அடி, உயரம் 20 அடி உள்ள இந்த கட்டிடத்திற்கு 2015 ஒக்டோபர் 14 ஆந் திகதி சபைத் தீர்மானம் எடுக்கப்பட்டு கலாச்சார மண்டபத்திற்கான வாடகையை பெற கேள்வி கோரலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது அதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் ரூபா 74,000 மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் எந்த ஒரு நிறுவனமும் விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பொது நிதி சிக்கனமற்றதாக பாவிக்கப்படாமல் இவ் கட்டடத்தின் மீதி வேலையினை முடித்து சபைக்கு வருமானம் எடுக்கும் வழியை உருவாக்கி மக்களுக்கு நல்ல சேவை செய்ய தேவையான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என கணக்காய்வில் தெரிவிக்கின்றோம்.

### 3.4.2 காலதாமத செயற்திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 139,522,351 பெறுமதியான 493 ஒப்பந்த வேலைத்திட்டங்கள் சபைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் ரூபா 2,775,269 பெறுமதியான 343 ஒப்பந்த வேலைத்திட்டங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தம் செய்திருந்த வேலைத்திட்டங்களில் ரூபா 77,229,695 பெறுமதியான 294 வேலைத்திட்டங்களே முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(i) ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,925,454 பெறுமதியான 20 வேலைத்திட்டம் 2015 திசெம்பர் 31 இற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 இற்கு வேலை முடிவடைந்ததும் ஆனால் கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 6,762,733 பெறுமதியான 27 வேலைத்திட்டங்கள் காணப்படுகின்றன.

(iii) 2014 இல் பல மூலங்களில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த திட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்ட 19 திட்டங்களுக்கு ரூபா 22,140,289 பெறுமதியானவை 2016 மே 13 கணக்காய்வுத் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபுகஸ்தென்ன மேபீட்வத்த விற்பனை செய்யப்பட்ட காணியில் சிறுவர் பூங்கா நிர்மாணிக்க 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கூட்டுமொத்தம் ரூபா 1,227,408 பெறுமதியானவை கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் இக்காணி சபைக்கு சொந்தமாக மாற்றுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தில் நிக்ககட்டிகந்த குடிநீர் திட்டத்தில் மீதி வேலை முடிக்கும் திட்டத்திற்காக ரூபா 684,800 பெறுமதிக்கு 2014 ஒக்டோபர் 30 ஆந் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இத்திட்டம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. இவ் வேலைக்காக ரூபா 529,360 செலவு செய்ய இருந்த போதிலும் புதிய மின் இணைப்பு எடுப்பதற்காக விண்ணப்பிக்கும் போது பிரதம மின் பொறியியலாளரால் உப மின் பொறியில் இருந்து கட்டடம் வரையான தூரம் 950 மீற்றர் என்பதனால் இது நியம தூரத்தை விட அதிகமாக உள்ளதனால் 2015 ஒக்டோபர் 28 ஆந் திகதி மின் இணைப்பு வழங்க முடியாது என பிரதம மின் பொறியியலாளர் அறிவித்திருந்த போதும் 2016 மே 13 கணக்காய்வுத் திகதி வரை இது தொடர்பான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டம் 24 ஆம் பந்தியின் பிரகாரம் சபை எல்லைக்குள் வீதி இனங்காணப்பட்டு திட்டம் வரையப்பட்டு வீதிப் பெயர் பதிவேட்டை வர்த்தகமானியில் அறிவித்து சபைக்கு சொந்தமாக எடுக்க வேண்டியபோதும் 2012 ஆம் ஆண்டு வரை 962 வீதிகள் வீதிப் பதிவேட்டில் இருந்த போதிலும் அதன் பின்னர் செய்யப்பட்ட வீதிகள் வர்த்தகமானியில் அறிவிக்கப்படாது வீதிப் பதிவேட்டில் பதியப்படாமல் இருந்தது.

(ஈ) 1971 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் திருத்திய 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் 16 ஆம் பந்தியின் பிரகாரம், ஏற்பாடு செய்யப்படாமையால் 2001 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆகஸ்ட் வரை உள்ள காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பினை தாமதித்து அனுப்புவதனால் ரூபா 453,392 மேலதிக கட்டணமும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 2002 இல் இருந்து 2009 வரைக்கும் தாமதித்து அனுப்புவதனால் ரூபா 2,098 மேலதிக கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் திண்மக் கழிவுகளை ஒரு இடத்தில் இருந்து உரிய இடத்திற்கு கொண்டு செல்ல சபையினால் ரூபா 51,795,889 செலவு செய்யப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பிரித்தெடுக்கப்படாத குப்பைகளின் அளவு ஒரு நாளுக்கு தொன் 18-20 வரை இருந்த போதும் குப்பை பிரித்தெடுக்கும் இடத்திற்கு 1 - 5 தொன் குப்பைகள் மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) 2011 யூலை 05 ஆந் திகதிய 1713/11 இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தகமானி ஐ(அ) பிரிவின் பிரகாரம் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக உபபிரிவு 22 ஆம் பந்தியின் பிரகாரம் கூறப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தவும் சபையினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குப்பைகள் பிரித்தெடுக்கும் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டிற்காக 41003 முப கூட்டெரு ரூபா 546,690 பெறுமதிக்கு விற்பனை செய்திருந்த போதும் அந்த கூட்டெரு தயாரிப்புக்காக ரூபா 25,682,980 செலவு செய்யப்பட்டிருந்தது. உற்பத்தி குறைவுக்கான காரணம் வேலையாட்கள் பற்றாக்குறை என அறிக்கையிடப்பட்ட போதும் வருகைப்பதிவேட்டின் படி அத்திட்டத்தில் உள்ள ஆட்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 1,545,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.7 சூழல் பாதிப்பு**

மக்கள் முறைப்பாட்டு பதிவேட்டில் 2014 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாட்டில் 14 முறைப்பாடுகள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாட்டில் 11 முறைப்பாடுகளும் தீர்ப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த முகாமைத்துவம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்